செய்தி வெளியீடு எண்: 460

செய்தி வெளியீடு – 22.11.2006

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இன்று சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் பல்வேறு பணிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டார்கள்.

ஆய்வின் முடிவில் பின்வரும் ஆணைகளை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கினார்கள்.

1. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் 33,333 மகளிர் பயனடையும் வகையில் ரூபாய் 50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு பெரும் வரவேற்வு இருப்பதைக் கருத்தில் கொண்டு இதன் கீழ் அதிக மகளிர் பயனடையும் வண்ணம் நிதி ஒதுக்கீட்டை ரூபாய் 60 கோடியாக உயர்த்தி ஆணையிட்டுள்ளார்.
2. கடும் ஊனமுற்றோருக்கான பராமரிப்புத் தொகை ஒவ்வொரு மாதமும் ரூபாய் 200 வீதம் வழங்கப்பட்டது. இந்த ஆண்டு முதல் இந்தத் தொகை மாதம் ரூபாய் 500 ஆக உயர்த்தப்பட்டு இதன் மூலம் 8400 பேர் தற்போது பயனடைந்து வருகிறார்கள். இந்தத் திட்டத்திற்கு நல்ல வரவேற்பு இருப்பதால் பயனாளிகளின் எண்ணிக்கையை 8400லிருந்து 10000 ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

இதனால் அரசுக்கு ஆண்டுக்கு கூடுதலாக சுமார் ஒரு கோடி ரூபாய் செலவாகும்.

3. டாக்டர் தர்மாம்பாள் விதவை மறுமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் பயன்பெற தற்போது வயதுவரம்பு 20 முதல் 30 ஆண்டுகளாக உள்ளது. 30 வயதைக் கடந்த விதவைகளை மறுமணம் செய்து கொள்கிறார்கள் என்பதைக் கவனத்தில் கொண்டு இந்த வயதுவரம்பை 30லிருந்து 35ஆக உயர்த்த ஆணையிடப்பட்டுள்ளது.

4. தமிழக அரசின் கலப்புத் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் தற்போது ஆண்டொன்றிற்கு ரூபாய் 250 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயன் பெற அதிக விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இதனைக் கருத்தில் கொண்டு இத்திட்டத்திற்காக கூடுதலாக ரூபாய் 100 இலட்சம் வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

5. சத்துணவு மற்றும் அங்கன்வாடி மையங்களில் 30000 பணியாளர்கள் உடனடியாக நியமனம் செய்யப்படுவார்கள்.

வெளியிடு! இயக்குநர்
செ.ம.தொ.துறை
செ-9